**சுருக்கம்**

அறிவிப்பு – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் விழிப்புணர்வு தொடர்பான குறும்படம், புகைப்படக் காட்சிகளுடன் கூடிய தகவல் பலகை மற்றும் கையேடுகள் தயாரித்து பயிற்சி வழங்குதல்– அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ2) துறை**

அரசாணை (நிலை) எண்.23

நாள்: 28.02.2017
துன்முகி, மாசி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது:

இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை, கடிதம் எண்.உ1/24594/2016, நாள் 23.11.2016.

**ஆணை:-**

2016–2017–ஆம் ஆண்டு வரவு – செலவு கூட்டத் தொடரின்போது, வெளிமாநில தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிவதை உறுதி செய்ய, அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களது தாய்மொழிகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த குறும்படங்கள் மற்றும் புகைப்படங்களுடன் கூடிய தகவல் பலகைகள் 15 இலட்சம் ரூபாய் செலவில் தயாரித்து பயிற்சி வழங்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கட்டுமான பணியிடத்தில் விபத்துகள் அதிக அளவில் நிகழும் காரணிகளாகிய உயரப்பணி மற்றும் மின்சாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஐந்து நிமிடங்கள் கொண்ட பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்கவும், முன்மாதிரி புகைப்படக் காட்சிப் பலகை மற்றும் கட்டுமான பணியிடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் தயார் செய்யவும் மற்றும் நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த கையேடுகள் தயார் செய்து அவற்றை தேவைக்கேற்ப அச்சிட்டு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின் போது தொழிலாளர்களுக்கு வழங்கவும் இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் தக்க கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களின் கருத்துருவினை கவனமாகப் பரிசீலித்த அரசு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் விழிப்புணர்வு தொடர்பான குறும்படம், புகைப்படக் காட்சிகளுடன் கூடிய தகவல் பலகை மற்றும் கையேடுகள் தயாரிக்கும் பணியினை, உரிய கொள்முதல் வழிமுறைகளைப் பின்பற்றி ரூ.15 இலட்சம் உத்தேச செலவில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல

.த.பி.பா.

வாரிய நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ள இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. மேலும், இக்கருத்துருவினை உரிய நேரத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் முன்வைத்து ஒப்புதல் பெறுமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை முன்பணமாக இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யுமாறு செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இந்நேர்விலான பட்டியல் மற்றும் பயனீட்டுச் சான்றிதழை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திடம் சமர்ப்பித்து கணக்கினை நேர்செய்யுமாறு இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மங்கத் ராம் சர்மா,**
**அரசு முதன்மைச் செயலாளர் (பொ).**

**பெறுநர்**

இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–600 014.
தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித்துறை , சென்னை – 600 009.
செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–2) துறை, சென்னை–600 009. (2 நகல்)
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

28-2-17